## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| | | |
|---|---|---|
| **MCOP.No. 45/2024** | **Date : 11.09.2026** | **PW 1** |
| Name: தமிழ்செல்வி | க/பெ.லேட்.கதிரவன் | |

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக முதல் தகவலை அளித்தது எனது உறவினர் என்றால் சரிதான். அவர் என் கணவரின் அண்ணன் ஆவார். மேற்படி குற்ற வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான சிவராமன், கந்தன் ஆகீய இருவரையும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியமளித்த முதல் விசாரணை குறித்து எனக்கு தெரியும் என்றால் தெரியாது. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன கண்ணுற்ற சாட்சிகள் குறித்து குறிப்பிட்டுளளேன் என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சிகளே சாலையில் நாய் குறுக்கே வந்ததால்தான் விபத்து ஏற்பட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்ரதையால் விபத்து ஏற்படவில்லை என்ற சாட்சியமளித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாய் குறுக்கே வந்துதான் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும் அஜாக்ரதையாகவும் விபத்தை ஏற்படுத்தியதால்தான் என் கணவர் இறந்துவிட்டார். விபத்திற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் முறையாக 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செலுத்தியுள்ளதாலும், 2ம் எதிர்மனுதாரர் பகரப்பொறுப்பாளி என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

ஓம்/–தமிழ்செல்வி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.